WS9

D–1218

Sub. Code
10711

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2019.

First Semester

Tamil

இக்கால இலக்கியம்

(CBCS – 2018-19 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. குயில்பாட்டு – பெயர்க்காரணம் தருக.

2. பாரதிதாசன் படைப்புகள் இரண்டினைச் சுட்டுக.

3. கண்ணதாசன் குறிப்பிடும் மாங்கனி பற்றி எழுதுக.

4. மு. மேத்தாவின் ஊர்வலம் கவிதையில் கூறப்படும் செய்தி யாது?

5. இளம்பிறையின் நீ எழுத மறுக்கும் எனதழுகு கவிதையின் சிறப்பு யாது?

6. ஞாயிற்றுக்கிழமை பள்ளிக் கூடம் எது?

7. புதுமைப்பித்தனின் பொன்னகரம் உரைக்கும் உண்மை என்ன?

8. மாறுதடம் என்றால் என்ன? ஆசிரியர் யார்?

9. ‘ஹைக்கூ கவிதை’ குறிப்பு வரைக.

10. ‘அளம்’ நாவலின் ஆசிரியர் பற்றிக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மீராவின் – ஊசிகள் கவிதை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அ.வெண்ணிலாவின் – யுத்தம் பற்றி விவரிக்க.

12. (அ) ஹைக்கூ கவிதைகள் காட்டும் சமூகத்தினை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தேனம்மை லட்சுமணனின்அன்னப்பட்சி கவிதை குறித்து எடுத்துரைக்க.

13. (அ) அய்க்கணின் இன்னொரு காந்திக்காக – நாடகத்தின் நாடகமாந்தர்களை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) வண்ணதாசனின் பற்பசைக்குழாயும் நாவல் பழங்களும், கதைக்களம் பற்றி விவரிக்க.

14. (அ) வ.சுப. மாணிக்கனார் கம்பர் பற்றிக் கூறும் செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) தங்கம் மூர்த்தியின் கவிதை ஆளுமையினைச் சுட்டுக.

15. (அ) 'திருஷ்டி பரிகாரம்' தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஜெயகாந்தனின் தமிழச்சி பற்றி எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழ்ப் புதுக்கவிதையின் போக்கினை மதிப்பிடுக.

17. ஜெயகாந்தனின் சிறுகதைகளில் வரும் விளிம்பு நிலையினர் பற்றி விவரிக்க.

18. பாரதிதாசனின் தமிழ்ப்பற்றை எடுத்துரைக்க.

19. வண்ணதாசனின் படைப்புகள் குறித்துக் கட்டுரைக்க.

20. 'அளம்' நாவலின் கட்டமைப்பு பற்றி விளக்குக.

**D–1219**

| **Sub. Code** |
|---|
| **10712** |

DISTANCE EDUCATION

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2019.

First Semester

தமிழ்

இலக்கணம் – நன்னூல் – எழுத்து

(CBCS 2018-19 Academic year onwards)

Time : Three hours                    Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. முதல் நூல் பற்றிக் குறிப்பிடுக.

2. ‘உத்தி’ - விளக்கம் தருக.

3. நூலின் பெயர்க்காரண இலக்கணத்தை எழுதுக.

4. நிறைகோலின் மாட்சியினைப் பகர்க.

5. மாணவர்களின் இலக்கணத்தைக் குறிப்பிடுக.

6. சிறப்புப் பாயிரம் குறித்து எழுதுக.

7. எழுத்தின் பெயர்களைப் பகர்க.

8. உயிரளபெடைக்குச் சான்று தருக.

9. மாத்திரை குறித்துக் குறிப்பிடுக.

10. தவரை திறுத்தம் செய்து எலுதி காட்டுக - இதில் காணும் பிழைகளைச் சுட்டுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) விருத்தியுரை பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மாணாக்கர் ஆகாதவன் இலக்கணத்தைத் தருக.

12. (அ) தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) சார்பெழுத்தின் விரி பற்றி எடுத்துரைக்க.

13. (அ) குற்றியலிகரத்தைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) 'போலி' குறித்து விவரிக்க.

14. (அ) ஓரெழுத்து ஒரு மொழிகள் பற்றிச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) பண்புப் பகுதியின் இயல்பினை எடுத்துரைக்க.

15. (அ) வடமொழியாக்கம் குறித்துச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) பணி வாய்ப்பு வேண்டி உரியோர்க்குக் கடிதம் எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பத்து வகை நூலின் அழகுகளைக் கூறி விளக்குக.

17. சூத்திரத்தின் வகைகளைச் சான்றுடன் விளக்கி வரைக.

18. எழுத்துக்களின் பிறப்பு குறித்துக் கட்டுரைக்க.

19. காலங்காட்டும் விகுதிகள் பற்றிக் கட்டுரை வரைக.

20. வேற்றுமை உருபுகளின் புணர்ச்சி பற்றி விவரிக்க.

---

**D–1220**

| Sub. Code |
|---|
| **10713** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2019.

First Semester

தமிழக வரலாறு

(CBCS 2018-2019 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. வரலாற்று அறிவிற்குச் செப்பேடுகளின் பயன்பாடு கூறுக.

2. தமிழக வரலாற்றிற்க்கான அயல்நாட்டார் குறிப்புக்கள் பற்றிக் கூறுக.

3. தமிழகத்தின் திணை நிலப் பகுப்புப் பற்றிக் கூறுக.

4. களப்பிரர் பற்றிக் குறிப்புரைக்க.

5. பல்லவர் காலக் கல்வி நிலை பற்றிக் கூறுக.

6. திருப்புறம்பியம் போர் பற்றிக் குறிப்புத் தருக.

7. பாளையப்பட்டுப் பற்றி அறிவுறுத்துக.

8. சோழர் காலத்தில் இசைக்கலை வளர்ச்சி குறித்து எழுதுக.

9. விடுதலைப் போரில் பூலித்தேவனின் பங்களிப்பு யாது?

10. தமிழகத்தில் பெண்ணிய இயக்க வரலாறு பற்றிக் கூறுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வரலாற்று அறிவிற்குக் கல்வெட்டுகளின் பயன்பாடுகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) சிந்துவெளி நாகரிகம் வெளிப்படுத்தும் செய்திகளைக் கூறுக.

12. (அ) சங்ககாலப் பெண்டிர் நிலை பற்றி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழக வரலாற்றில் சாளுக்கியர் பெறும் இடம் பற்றிக் கூறுக.

13. (அ) பல்லவர் காலக் கட்டிடக்கலை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இராசேந்திரச் சோழனின் தனிச் சிறப்புக்களை உரைக்க.

14. (அ) தமிழக வரலாற்றில் சோழரின் வீழ்ச்சி பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) சோழர்காலக் கல்வி நிலை குறித்து எழுதுக.

15. (அ) விடுதலைப் போரில் கட்டப்பொம்மனின் செயல்பாடு பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஆங்கிலேயர் ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மைகளைத் தெரிவிக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்ககால அரசியல் வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைக்க.

17. பல்லவர், சோழர் ஆட்சி முறைமையை ஒப்பிட்டு வரைக.

18. சோழர்கள் கலைகளைப் போற்றி வளர்த்த திறம் உரைக்க.

19. நாயக்கர் வரலாறும், ஆட்சியும் குறித்து விவரிக்க.

20. இந்திய விடுதலைக்குத் தமிழர் தம் பங்களிப்புக் குறித்து எழுதுக.

———————

**D–1221**

| **Sub. Code** |
| --- |
| **10714** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2019.

First Semester

சிற்றிலக்கியம்

(CBCS – 2018-19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. கல்லாடம் பற்றிக் குறிப்பு வரைக.
2. கலம்பகத்தின் இலக்கணத்தைத் தருக.
3. நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவனைச் சுட்டுக.
4. திருப்பல்லாண்டு - விளக்கம் செய்க.
5. சீதக்கடல் - எது?
6. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் பற்றிக் கூறுக.
7. உலாவிற்கான இலக்கணத்தைப் பகர்க.
8. ஒட்டக்கூத்தர் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.
9. பரணி என்றால் என்ன?
10. பெண்பால் பிள்ளைத் தமிழின் பருவங்களைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாறாக் கற்பின் அன்னை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) 'கள்வரைக் காணும் உள்ளம் போல' - விளக்கம் செய்க.

12. (அ) நிறையுடைக் கல்வி பெருமதி மாந்தர் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) பொழுது போகாமை குறித்துத் தலைவி தோழிக்குக் கூறினவற்றைத் தருக.

13. (அ) பெரியாழ்வாரின் பக்திமையைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பெரியாழ்வாரின் தாலாட்டு பற்றி விவரிக்க.

14. (அ) கலிங்கத்துப் பரணியின் அமைப்பினை எழுதுக.

(அல்லது)

(ஆ) காளி பாடியது பற்றி விரித்துரைக்க.

15. (அ) குலோத்துங்கனின் ஆட்சிச் சிறப்பைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஒட்டக்கூத்தரின் கவித்திறனை மதிப்பிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடையளிக்க.

16. கல்லாடம் உணர்த்தும் தத்துவப் பொருளை விளக்கி வரைக.

17. "நானும் என் கவியும் எவ்விடம் புகுவோம்" - விரித்துரைக்க.

18. கண்ணபிரானின் பிள்ளைமைக் குணத்தினை விளக்குக.

19. மீனாட்சியின் அருட்செயல்களைத் தொகுத்துரைக்க.

20. குலோத்துங்கன் சோழனுலாவில் பெண்களின் நிலைப்பாடு பற்றிக் கட்டுரை வரைக.

**D–1222**

| Sub. Code |
|---|
| **10721** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2019.

Second Semester

அற இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. திருக்குறளின் அமைப்புப் பற்றிக் கூறுக.

2. கவரிமானின் சிறப்புக் கூறுக.

3. பெருமை, சிறுமை – இவற்றின் சிறப்புக் கூறுக.

4. சால்பூன்றிய தூண் ஐந்து எவை?

5. வைகலை வைத்துணராதார் பற்றிக் கூறுக.

6. பிறனில் புகல் யாது தரும்?

7. ‘ஈனுமோ வாழை இருகால்குலை’ – உணர்த்துவது கூறுக.

8. கூருமமே கண்ணாயினார் பற்றிக் கூறுக.

9. ‘தீயன நல்லனவாகா’ – விளக்கம் தருக.

10. ‘இயக்குறு திங்கள் இருட்பிழம்பு ஒக்கும்’ எது? விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நல்லகுடி பிறந்தார் பற்றிக் குறள் கூறுவனவற்றைக் கூறுக.

(அல்லது)

(ஆ) மானமுடையார் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?

12. (அ) பிறர்மனை நயத்தலின் தீதுகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாலடியார் கூறும் அறிவுடைமையின் சிறப்புக் கூறுக.

13. (அ) வெகுளாமை பற்றிப் பழமொழிப் பாடல்கள் உரைப்பன யாவை?

(அல்லது)

(ஆ) கீழ்மக்களின் இயல்புகளைப் பழமொழிப் பாடல்கள் எடுத்துரைப்பது எவ்வாறு?

14. (அ) யாக்கை நிலையாமை பற்றித் திருமூலர் கூறும் செய்திகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) இளமை நிலையில்லாதது என்பதைத் திருமந்திரம் எடுத்துரைப்பது எவ்வாறு?

15. (அ) நல்லாரின் இயல்புகள் பற்றிக் குமரகுருபரர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) துறந்தார் பற்றி நீதிநெறி விளக்கம் கூறும் செய்திகளைக் குறிப்பிடுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பண்புடைமை பற்றிய வள்ளுவரின் கருத்துக்களை வரைக.

17. அறன் வலியுறுத்தும் நாலடியாரின் செய்திகளை நவில்க.

18. சான்றோர் செயல் பற்றிப் பழமொழி நானூறு கூறும் செய்திகளை எடுத்துரைக்க.

19. செல்வம் நிலையில்லாதது என்பதைத் திருமந்திரம் விளக்கம் செய்வதை விளம்புக.

20. நீதிநெறி விளக்கம் கூறும் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

———————

**D–1223**

| **Sub. Code** |
|---|
| **10722** |

DISTANCE EDUCATION

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2019.

Second Semester

தமிழ்

இலக்கணம் — நன்னூல் - சொல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தொடர்மொழி பற்றி எழுதுக.

2. 'இயல்பு வழக்கு' - சான்றுடன் குறிப்பிடுக.

3. காலத்தால் வரும் பெயர்களைச் சுட்டுக.

4. ஆகுபெயர் என்றால் என்ன?

5. தெரிநிலை வினைமுற்றினை சான்றுடன் விளக்குக.

6. செய்யுமென் எச்சம் பற்றிக் குறிப்பிடுக.

7. சுவைப் பண்புத் தொகைக்குச் சான்று தருக.

8. உம்மைத் தொகை-விளக்கம் செய்க.

9. வழுவமைதி குறித்து எழுதுக.

10. எழுத்துரைகளில் அமையும் நிறுத்தக் குறிகளைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) உயிர்திணைப் பால்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) திசைச்சொல்லை சான்று காட்டி விளக்குக.

12. (அ) மூவிடப் பெயர்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பெயர் வேற்றுமையைச் சான்றுடன் விவரிக்க.

13. (அ) 'பிறதின் கிழமை பேணுதல் பொருளே' - விளக்கம் செய்க.

(அல்லது)

(ஆ) உருபு மயக்கம் குறித்து எடுத்துரைக்க.

14. (அ) வியங்கோள் அசைச் சொல் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இடைச் சொற்களின் வகைகளைத் தருக.

15. (அ) முன்னிலை அசைச்சொல் பற்றி குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஒரு குணம் தழுவிய உரிச் சொற்கள் பற்றிச் சுட்டுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சொல்லின் பொது இலக்கணம் கூறி விளக்குக.

17. வினையெச்ச வாய்பாடுகளை விரித்துரைக்க.

18. எண் வகை விடைகள் பற்றிக் கட்டுரைக்க.

19. பொருள்கோள் குறித்து விளக்கி வரைக.

20. உயிர்களின் பாகுபாட்டினை நன்னூலாரின் விதிநின்று விரித்துரைக்க.

———————

**D–1224**

| Sub. Code |
|---|
| **10723** |

DISTANCE EDUCATION

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2019.

Second Semester

Tamil

தமிழ் மொழி வரலாறு

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. மொழியாவது யாது?

2. திராவிட மொழிகளைக் குறிப்பிடுக.

3. சங்கத்தமிழ்- விளக்கம் தருக.

4. கல்வெட்டின் பயன்களைக் கூறுக.

5. இடைக்காலத் தமிழில் உட்படும் இலக்கியங்கள் யாவை?

6. கலைச் சொல் எனப்படுவது யாது?

7. மொழிக் கலப்பாவது யாது?

8. தமிழில் இகர, ஒகர மாற்றம் பற்றி உணர்த்துக.

9. பட எழுத்து முறை பற்றி விளக்கம் தருக.

10. எழுத்துச் சீர்திருத்தமாவது யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திராவிட மொழிகளில் தமிழின் சிறப்புக் கூறுக.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் பற்றி அறிமுகம் செய்க.

12. (அ) பல்லவர் காலத் தமிழில் காணலாகும் உயிரொலி மாற்றங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மராட்டியர் காலத்தில் தமிழில் வந்தமைந்த புதிய சொற்களைச் சுட்டியுரைக்க.

13. (அ) கவிதை மொழி பற்றிக் கருத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மொழியறிவிற்கு மொழிபெயர்ப்பின் பயன்களைக் குறிப்பிடுக.

14. (அ) வானொலித் தமிழின் இயல்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சித் தமிழின் அமைவுகளைக் குறிப்பிடுக.

15. (அ) தமிழகத்தில் காணலாகும் கிளைமொழிகளைக் அறிமுகம் செய்க.

(அல்லது)

(ஆ) பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழி வரலாற்றை அறிதற்கான சான்றாதாரங்கள் பற்றி விளக்கியுரைக்க.

17. சோழர் காலத் தமிழில் காணலாகும் ஒலி மாற்றங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

18. அறிவியல் சொற்களைத் தமிழ்ப்படுத்தும் பான்மை குறித்து விளக்குக.

19. இக்காலத் தமிழ் மொழியின் இயல்புகளை எடுத்துரைக்க.

20. தமிழ்மொழி வரிவடிவில் ஏற்பட்டமைந்த மாற்றங்களை விவரிக்க.

———————

**D–1225**

**Sub. Code**
**10724**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2019.

Second Semester

திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

(CBCS – 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு விடை தருக.

1. ‘திராவிடம்’ என்பதன் விளக்கம் தருக.

2. நடுதிராவிட மொழிகளைக் குறிப்பிடுக.

3. மலையாள மொழியின் தோற்றம் கூறுக.

4. உருபன் என்பது யாது?

5. பெயர்ச் சொற்களின் பாகுபாடு கூறுக.

6. சொல் உணர்த்தும் மூவிடங்கள் பற்றிக் கூறுக.

7. வினைச் சொல்லாவது யாது?

8. பெயரெச்சமாவது யாது?

9. தமிழின் தொடரமைவு எத்தகையது?

10. வால்டுவெல் பற்றிய அறிமுகம் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) வட திராவிட மொழிகள் பற்றி அறிமுகம் செய்க.

(அல்லது)

(ஆ) கன்னட மொழியின் தோற்றமும் தனிச் சிறப்பும் கூறுக.

12. (அ) திராவிட மொழிகளின் உயிரொலிகள் பற்றி உரைக்க.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளில் விரவுப் பெயர்கள் குறித்து எழுதுக.

13. (அ) திராவிட மொழிச் சொற்களின் பால் பகுப்புப் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) சொற்கள் எண் உணர்த்துதல் பற்றிக் கூறுக.

14. (அ) திராவிட மொழிகளின் வினைச் சொல் வகைகள் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) சொற்கள் காலம் காட்டும் முறைமை கூறுக.

15. (அ) திராவிட மொழிகளில் குறிப்பு வினை பற்றிக் கருத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மலையாள மொழியின் தொடரமைப்பினை விளக்கியுரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திராவிட மொழிகளின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

17. திராவிட மொழிகளின் மெய்யொலி அமைவும் மாற்றமும் குறித்து எழுதுக.

18. திரரவிட மொழிச் சொற்கள் திணை உணர்த்தும் பான்மை காட்டுக.

19. திராவிட மொழிகளில் எச்சச் சொற்களின் இயல்புகளை எடுத்துரைக்க.

20. திராவிட மொழிகளின் தொடரமைப்புக்களை ஒப்பு நோக்கி உரைக்க.

———————